**ஆகஸ்ட் – 18**

# தேசியச் செய்திகள்


## அறிவிக்கப்பட வேண்டிய நோயாகப் புற்றுநோய்




- புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்காக, அதனை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவிக்குமாறு 19 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 17 மாநிலங்கள் ஏற்கனவே புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவித்துள்ளன என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- நாடு முழுவதும் புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவிக்கக் கோரி தொடரப்பட்ட பொதுநல வழக்கின் (PIL) அடிப்படையில் இந்த வழக்கு விசாரிக்கப் பட்டது.
- அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவிக்கப்படுவதன் மூலம், புற்றுநோய் பாதிப்புகள் குறித்து சுகாதார அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும், இது தரவு சேகரிப்பு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த உதவும்.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கும் ஏன் கட்டாய வழி காட்டுதல்கள் வழங்கப்படவில்லை என்றும் மத்திய அரசிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.
- நாடு முழுவதும் புற்றுநோயை அறிவிப்பதில் ஒரே மாதிரியான கொள்கை தேவை என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது.

- காசநோய், டெங்கு, மலேரியா, காலரா, ஹெபடைடிஸ், தட்டம்மை, லெப்டோஸ்பைரோசிஸ் மற்றும் போலியோ ஆகியவை பொதுவாக அறிவிக்கப்பட வேண்டிய நோய்களில் அடங்கும்.

## இந்தியாவின் வேளாண்மைப் பொருளாதாரத்தின் விரிவாக்கம்




- கடந்த பத்தாண்டுகளில், அதிகரித்த விவசாய உற்பத்தி, விவசாயிகளுக்கான கூடுதல் ஆதரவு, நிறுவன ரீதியிலான கடன் வசதிகள் எளிதாகக் கிடைத்தல் மற்றும் தொழில் நுட்பம் மற்றும் நிலையான விவசாய முறைகளை அதிகளவில் பின்பற்றுதல் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகள் குறிப்பிடத் தக்க வளர்ச்சியைப் கண்டுள்ளன.
- இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயத் துறை, நாட்டின் மொத்தப் பணியாளர்களில் சுமார் 46.1 சதவீதத்தினருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது.
- விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளின் 'மொத்த மதிப்பு கூடுதல்' (Gross Value Added) மதிப்பானது, 2014-15-ஆம் ஆண்டில் ரூ. 20.94 லட்சம் கோடியாக இருந்த நிலையில் இருந்து, 2025-26-ஆம் ஆண்டில் ரூ. 52.08 லட்சம் கோடியாக (மதிப்பீடு) உயர்ந்துள்ளது.
- அதேபோல, விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத் துறைக்கான நிதிநிலை ஒதுக்கீடும் 2013-14-ஆம் ஆண்டில் ரூ. 27,663 கோடியாக இருந்ததிலிருந்து, 2026-27-ஆம் ஆண்டில் ரூ. 1,40,528.78 கோடியாக அதிகரித்துள்ளது.


### *அதிக உற்பத்தியை அறுவடை செய்தல்*

- மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2013-14-ஆம் ஆண்டில் 265.05 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 2025-26-ஆம் ஆண்டில் 376.56 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.
- இதே காலக் கட்டத்தில், தோட்டக்கலை உற்பத்தி 280.70 மில்லியன் டன்னிலிருந்து 377.78 மில்லியன் டன்னாக (மதிப்பீடு) உயர்ந்துள்ளது.
- அதேவேளையில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 2014-15-ஆம் ஆண்டில் 27.51

மில்லியன் டன்னிலிருந்து 2025-26-ஆம் ஆண்டில் 43.06 மில்லியன் டன்னாக அதிகரித்து உள்ளது.

- PM-KISAN போன்ற திட்டங்கள் மூலம் விவசாயிகளுக்கான நேரடி ஆதரவும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் (Pradhan Mantri Fasal Bima Yojana) கீழ், 2016-17-ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 92.46 கோடிக்கும் அதிகமான விவசாயிகளின் விண்ணப்பங்களுக்குக் காப்பீடு அளிக்கப்பட்டுள்ளது.
- பால் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது; உலகளாவிய உற்பத்தியில் ஏறக்குறைய 25 சதவீதப் பங்கை இந்தியா கொண்டுள்ளது.
- கோழி மற்றும் இறைச்சி உற்பத்தியும் அதிகரித்துள்ளது; முட்டை உற்பத்தியில் உலக அளவில் இந்தியாவும் இரண்டாவது இடத்தையும், இறைச்சி உற்பத்தியில் நான்காவது இடத்தையும் வகிக்கிறது.

## கடுகு மரபணு வளங்களுக்கான NBA நிதி





- தேசியப் பல்லுயிர் ஆணையம் (NBA), மெஸ்ஸர்ஸ் பயோனியர் ஓவர்சீஸ் பெரு நிறுவனத்திடமிருந்து அணுகல் மற்றும் பயன் பகிர்வு (ABS) மூலம் நிதியை விடுவித்து உள்ளது.
- பயோனியர் ஓவர்சீஸ் பெருநிறுவனமானது, இந்தியாவின் உயிரியல் வளங்களைப் பயன்படுத்தி பத்து வணிகரீதியான கடுகு (பிராசிகா ஜுன்சியா) கலப்பின

வகைகளை உருவாக்கியுள்ளது.

- ஒவ்வொரு மாநிலத்திலும் கடுகு சாகுபடி செய்யப்படும் பரப்பளவின் அடிப்படையில் ABS பங்கு கணக்கிடப்பட்டுள்ளது.
- இந்த செயல்முறையானது, நகோயா நெறிமுறை மற்றும் குன்மிங்-மான்ட்ரியல் உலகளாவியப் பல்லுயிர் தன்மை கட்டமைப்பின் இலக்கு 13 ஆகியவற்றின் கீழ் உள்ள நியாயமான மற்றும் சமமான பயன் பகிர்வுக் கொள்கையுடன் ஒத்துப் போகிறது.
- இந்தியாவின் கடுகு சாகுபடியில் ஏறக்குறைய 42 சதவீதம் ராஜஸ்தானில் உள்ளது.
- இதுவே அதிகபட்ச பயனைப் பெறுகிறது.
- இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் உள்ளன.

## 8வது பிரிக்ஸ் (BRICS) கடல் மற்றும் துருவப் பகுதி அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கூட்டம்




- 2026-ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் பிரிக்ஸ் தலைமைத்துவத்தின் ஒரு பகுதியாக, கடல் மற்றும் துருவப் பகுதி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் (OPST) குறித்த பிரிக்ஸ் பணிக்குழுவின் 8-வது கூட்டம் கோவாவில் நடைபெற்றது.
- இக்கூட்டத்தைப் புவி அறிவியல் அமைச்சகத்தின் (MoES) கீழ் இயங்கும் தேசிய துருவ மற்றும் கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) நடத்தியது.
- கடல்சார் அறிவியல் மற்றும் துருவப் பகுதி ஆய்வுகளில் ஒத்துழைப்பை மேற்கொள்வதற்கான நடுத்தர கால (5 ஆண்டுகள்) செயல் திட்டம் குறித்து 11 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் விவாதித்தனர்.
- உறுப்பு நாடுகளுக்கு இடையே அறிவியல் ஒத்துழைப்பு, அறிவுப் பரிமாற்றம், திறன்

மேம்பாடு மற்றும் கூட்டு ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக 2018-ஆம் ஆண்டில் இந்த பிரிக்ஸ் OPST பணிக்குழு நிறுவப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## பன்னாட்டுக் கடல்சார் பாதுகாப்புக் கூட்டணி

❖ செங்கடல், பாப் அல்-மாண்டெப் நீர்ச்சந்தி மற்றும் ஏடன் வளைகுடா ஆகியவற்றில் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக சவுதி அரேபியா பன்னாட்டுக் கடல் சார் பாதுகாப்பு கூட்டணியை (MMDC) தொடங்கியுள்ளது.

❖ வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று ரியாத்தில் நடைபெற்ற பிராந்திய உச்சி மாநாட்டிற்குப் பிறகு இந்தக் கூட்டணி உருவாக்கப் பட்டது.

❖ சவுதி அரேபியா, துருக்கி, பாகிஸ்தான், எகிப்து, வங்கதேசம், ஏமன், சோமாலியா, ஜிபூட்டி மற்றும் கொமொரோஸ் உள்ளிட்ட 14 நாடுகள் ஆரம்பத்தில் இந்த அறிவிப்பில் கையெழுத்திட்டன.

❖ பன்னாட்டுக் கடல்சார் பாதுகாப்பு கூட்டணியின் தலைமையகம் ரியாத்தில் அமைந்து உள்ளதுடன் மேலும் கூட்டுக் கடல்சார் செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு மையங்களையும் இது கொண்டுள்ளது.

❖ இதன் முதல் தளபதியாக சவுதி ரியர் அட்மிரல் அப்துல்லா பின் சலேம் அல்-ஷெஹ்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.




## அமெரிக்காவின் சரக்குப் பரிமாற்ற அறிக்கை

❖ "நிழல் சரக்குப் பரிமாற்ற வலைப்பின்னல்" அறிக்கையில் அமெரிக்கா இந்தியாவைக்

குறிப்பிட்டுள்ளது.

- சரக்குப் பரிமாற்றம் என்பது இறுதி இலக்கை அடைவதற்கு முன்பு ஒரு இடைநிலை நாடு வழியாக பொருட்கள் அனுப்பப்படுவதைக் குறிக்கிறது.
- சுங்க வரிகளை (இறக்குமதி மீதான வரிகள்) தவிர்ப்பதற்காக சில சீனப் பொருட்கள் மூன்றாம் நாடுகள் வழியாக அமெரிக்க சந்தைக்குள் நுழைந்ததாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.
- அமெரிக்காவின் சரக்குப் பரிமாற்ற அபாயக் கட்டமைப்பில் இந்தியா 'அடுக்கு 1 – பன்முகப் படுத்தப்பட்ட அளவிலான முன்னணியினர்' பிரிவில் வைக்கப்பட்டுள்ளது.
- சீனாவுடன் தொடர்புடைய சில தயாரிப்புகளுக்கான சாத்தியமான பாதையாக புனே-குஜராத்-சென்னை தொழில் வழித்தடத்தை இந்த அறிக்கை அடையாளம் கண்டுள்ளது.
- சந்தேகத்திற்குரிய வர்த்தகச் சரக்குப் போக்குவரத்தைக் கண்டறிந்து கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புகளைப் பயன்படுத்த அமெரிக்கா திட்டமிட்டு உள்ளது.




India named in US 'shadow transhipment network': What Trump report means for trade ties

## சுற்றுச்சூழல் செய்திகள்

### கருங்கழுத்துக் கொக்குத் திருவிழா – லடாக்

- அச்சுறுத்தலுக்கு உள்ளான இந்த இனத்தின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக லடாக் தனது முதல் கருங்கழுத்துக் கொக்குத் திருவிழாவை நடத்துகிறது.
- இந்த திருவிழா லடாக்கில் நடைபெறுகிறது, அங்குள்ள சாங்தாங் குளிர் வனவிலங்கு சரணாலயம் மட்டுமே இந்தியாவில் கருங்கழுத்துக் கொக்குகளின் ஒரே இனப்பெருக்க மையமாக உள்ளது.
- இந்தக் கொக்குகள் கிழக்கு லடாக்கின் சாங்தாங் பகுதியில் உள்ள சோ கர் மற்றும் ஹன்லே சதுப்பு நிலங்களில் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,500–5,000 மீட்டர் உயரத்தில் இனப்பெருக்கம் செய்கின்றன.

- கருங்கழுத்துக் கொக்கு (க்ரூஸ் நிக்ரிகால்லிஸ்) உலகின் ஒரே அதிஉயரப் பகுதியில் வாழும் கொக்கு இனமாகும், மேலும் இது IUCN செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இது லடாக்கின் மாநிலப் பறவையாகும், மேலும் அப்பகுதியில் இது புனிதமானதாகக் கருதப்படுகிறது.
- இந்தியா, பூட்டான், நேபாளம் மற்றும் சீனா முழுவதும் சுமார் 16,000 கருங்கழுத்துக் கொக்குகள் காணப்படுகின்றன.




## ஆசியாவின் முதல் பாலைவனக் கருத்துரு கொண்ட இரவு நேர வனவிலங்கு உலா




- குஜராத்தின் பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள டீசாவில் பாலைவன விலங்கியல் பூங்கா மற்றும் இரவு நேர வனவிலங்கு உலாவை அமைப்பதற்கான திட்டத்திற்கு மத்திய விலங்கியல் பூங்கா ஆணையம் (CZA) ஒப்புதல் அளித்துள்ளது.

- ஆசியாவின் முதல் பாலைவனக் கருத்துரு கொண்ட, வாகனத்தில் சுற்றிப் பார்க்கும் இரவு நேர வனவிலங்கு உலாவை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- முன்மொழியப்பட்ட இந்தப் பூங்காவில் மற்ற பாலைவனச் சூழல் மண்டலங்களைச் சேர்ந்த உயிரினங்களும் இடம்பெறும்.
- இந்தத் திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஆப்பிரிக்க இனங்களில் அங்கோலா ஒட்டகச் சிவிங்கி, கிரேவியின் வரிக்குதிரை, சிமிட்டார் ஓரிக்சு, ஆப்பிரிக்க குடு, ஸ்பிரிங்போக், அட்ரா கெஸல், கருப்பு காண்டாமிருகம், சிம்பன்சி, மீர்கட், ஆப்பிரிக்க சிறுத்தை, ஆப்பிரிக்க சிங்கம், ஃபென்னெக் நரி, வௌவால் காது கொண்ட நரி மற்றும் நெருப்புக் கோழி ஆகியவை அடங்கும்.
- கங்காருக்கள், ஈமுக்கள் மற்றும் வாலபிக்கள் ஆகியவை இந்தப் பூங்காவிற்காகத் திட்டமிடப் பட்டுள்ள ஆஸ்திரேலிய இனங்களில் அடங்கும்.
- முன்மொழியப்பட்ட பாலைவன விலங்கியல் பூங்கா மற்றும் இரவு சஃபாரி குஜராத்தில் அமைந்துள்ளதுடன் அதேசமயம் நன்கு அறியப்பட்ட பாலைவன தேசியப் பூங்கா ராஜஸ்தானில் அமைந்துள்ளது.
- பாலைவன தேசியப் பூங்கா என்பது இந்திய மாநிலமான ராஜஸ்தானில், ஜெய்சல்மர் மற்றும் பார்மர் நகரங்களுக்கு அருகில் அமைந்துள்ள ஒரு தேசியப் பூங்காவாகும்.
- பூங்காவின் சுமார் 44% மணல் குன்றுகளால் ஆனது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இளைஞர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்புப் போக்குகள் 2026: எதிர் காலத்தை நோக்கிய மீள்வரவு




- ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வெளியிட்டுள்ள புதிய அறிக்கை ஒன்று, கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு உலகளவில் குறைந்து இருந்த இளைஞர்களுக்கான வேலையின்மை விகிதம், தற்போது மீண்டும் மோசமடையத் தொடங்கியுள்ளதாக எச்சரித்துள்ளது.
- 2023-ஆம் ஆண்டில் கடந்த இருபது ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்திருந்த

இளைஞர்களுக்கான வேலையின்மை விகிதம், தற்போது அதிகரிக்கத் தொடங்கி உள்ளதை இந்த அறிக்கை காட்டுகிறது.

- அதிக வருமானம் கொண்ட நாடுகள், குறைந்த-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் என அனைத்துப் பொருளாதாரப் பிரிவுகளிலும் இந்த விகிதங்கள் அதிகரித்துள்ளன.
- அரபு நாடுகள் மற்றும் வட ஆப்பிரிக்கப் பகுதிகள் தொடர்ந்து உலகின் மிக உயர்ந்த இளைஞர் வேலையின்மை விகிதங்களைக் கொண்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## பரிச்சா அணைக்கட்டு - ICIDயின் பாரம்பரிய அங்கீகாரம்

- உத்தரப் பிரதேசத்தின் ஜான்சி மாவட்டத்தில் உள்ள 140 ஆண்டுகள் பழமையான நீர்ப்பாசனக் கட்டமைப்பான வரலாற்றுச் சிறப்புமிக்க 'பரிச்சா அணைக்கட்டு' (Parichha Weir), சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தால் (ICID) 'உலகப் பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு' (WHIS) எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு உலகளாவியப் பாரம்பரிய வரைபடத்தில் இடம் பிடித்துள்ளது.
- பரிச்சா அணைக்கட்டு 1886-ஆம் ஆண்டில் பெட்வா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டது.
- இத்திட்டத்தின் தொடக்கம் 1855-ஆம் ஆண்டிலேயே அமைந்தது; அப்போது கேப்டன் ஸ்ட்ராச்சி (Captain Strachey) என்பவர் பந்தேல்கண்ட் பகுதிக்கு ஒரு கால்வாய் அமைப்பை உருவாக்க முன்மொழிந்தார்.
- இது பெட்வா கால்வாய் அமைப்பின் முதன்மை நீர்ப்பாசனக் கட்டமைப்பாக (headworks) விளங்குகிறது.
- பெட்வா கால்வாய் அமைப்பு என்பது வறட்சிக்கு ஆளாகக்கூடிய பந்தேல்கண்ட் பகுதிகளுக்கு நீரை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு விரிவான நீர்ப்பாசன வலையமைப்பாகும்.
- இந்த பாரம்பரிய அங்கீகாரம், அக்டோபர் மாதம் பிரான்சில் நடைபெறவுள்ள 26-வது ICID சர்வதேச மாநாடு மற்றும் 77-வது சர்வதேச நிர்வாகக் குழு கூட்டத்தின் போது அதிகாரப்பூர்வமாக வழங்கப்படும்.
- 2022-ஆம் ஆண்டில், ஜான்சியில் உள்ள சுகுவா-துக்வான் (Sukwa-Dukwan) அணைக் கட்டும் ICIDயின் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

### *WHIS திட்டம்*

- 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான மற்றும் தங்களின் அசல் நோக்கத்திற்காகத் தொடர்ந்து பயன்பாட்டில் உள்ள நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை இத்திட்டம் அங்கீகரிக்கிறது.
- இது சர்வதேச நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் ஆணையத்தால் (ICID) வழங்கப்படுகிறது.
- 1950-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ICID, நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் ஒரு உலகளாவிய அமைப்பாகும்.
- நிலையான விவசாய நீர் மேலாண்மையை ஊக்குவிக்கவும் அடையவும் நீர்ப்பாசனம், வடிகால் மற்றும் வெள்ள மேலாண்மை ஆகிய துறைகளில் செயல்படும் ஒரு முன்னணி அறிவியல், தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை சார்ந்த இலாப நோக்கற்ற சர்வதேச அமைப்பு இதுவாகும்.


### *பெட்வா ஆறு*

- இது மத்திய மற்றும் வட இந்தியாவில் பாயும் 590 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு ஆறாகும்.

- இது யமுனை ஆற்றின் வலது கரையில் இணையும் ஒரு முக்கிய துணை ஆறாகும்.
- இது மத்தியப் பிரதேசத்தின் ரைசென் மாவட்டத்தில் உள்ள விந்திய மலைத்தொடரில் உற்பத்தியாகி, மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் வழியாக வடகிழக்கு திசையில் பாய்ந்து, ஹமீர்பூர் அருகே யமுனை ஆற்றுடன் கலக்கிறது.




## லித்தியம் மற்றும் சேலியம் ஆய்வு ஒப்பந்தம்





- கடப்பா படுகையின் (Kadapa Basin) வெம்பல்லே (Vempalle) பகுதியில் லித்தியம் மற்றும் சேலியம் படிவுகளை விரிவாக ஆய்வு செய்வதற்காக, ஆந்திரப் பிரதேச அரசு CSIR-தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (NGRI) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.
- இங்கு லித்தியத்தின் செறிவு 1,000 ppm (மில்லியனில் ஒரு பங்கு) வரையிலும், சேலியத்தின் அளவு 250 ppm வரையிலும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- தேசியப் புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் (NGRI) என்பது அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) கீழ் 1961-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு புவி அறிவியல் ஆராய்ச்சி அமைப்பாகும்.
- CSIR இந்தியாவின் மிகப்பெரிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பாகும்.
- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சித் துறையின் (DSIR) மேற்பார்வையில், 1942-ஆம் ஆண்டில் CSIR ஒரு தன்னாட்சி அமைப்பாக நிறுவப்பட்டது.

- கடப்பா படுகை (வரலாற்று ரீதியாக 'கடப்பா பேசின்' என்று அழைக்கப்படுகிறது) என்பது இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிறை வடிவத்திலான ஒரு பெரிய படிவுப் பாறைப் படுகையாகும்; இது தனது அபரிமிதமான கனிம வளம் மற்றும் பழமையான புரோடெரோசோயிக் (Proterozoic) காலப் பாறை அமைப்புகளுக்குப் பெயர் பெற்றது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### Triumph of the Indian Republic: My Life, My Struggles - ராம்நாத் கோவிந்த் எழுதிய நூல்

- 'Triumph of the Indian Republic: My Life, My Struggles' என்பது 2017 முதல் 2022 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் 14வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய ராம் நாத் கோவிந்தின் அதிகாரப்பூர்வ சுயசரிதையாகும்.
- புது தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் பிரதமர் நரேந்திர மோடியால் இப்புத்தகம் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் குடியரசுத் தலைவரான உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த முதல் நபர் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் (BJP) முதல் உறுப்பினர் ராம் நாத் கோவிந்த் ஆவார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★